ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# முருக வழிபாட்டில் உடலால் மேற்கொள்ளப்படும் காவடிக் காணிக்கை

**ஆய்வாளர்,**
***சீ.முத்துலட்சுமி,***
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை உருமு தனலெட்சுமி கல்லூரி,*
*(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது) திருச்சிராப்பள்ளி*

***ஆய்வுச்சுருக்கம் :***

*சங்க காலம் முதல் காலந்தோறும் தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகளில் முதலாவதாக இடம்பெற்றது இறை வழிபாடே. அவ் இறைவழிபாட்டில் ஆதி கடவுளாகவும், முழுமுதற் கடவுளாகவும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருப்பவர் முக்கண் முதல்வன் சிவபெருமான் ஆவார். அவரின் நெற்றிக்கண்ணில் இருந்து உதித்த இளையோனே முருகப்பெருமான். இம்முருகப்பெருமானே குறிஞ்சிமலைக் கிழான் ஆவான். இவன் தொல் பழங்குடி மக்களான குறிஞ்சி நில மக்களின் குலதெய்வமாக வெற்றிக் கடவுளாக எல்லா மனித உணர்வுகளின் உறைவிடமாக நீக்கமற நிறைந்திருப்பவர். நம் தமிழ்க்குடியின் முப்பாட்டனாக விளங்குகிற தெய்வம் சேயோனாகிய முருகனாவார். இம்முருகனுக்குச் சங்க காலம் முதலே நாட்டுப்புற மக்கள் விழாவெடுத்து பூசைகள் மேற்கொண்டு, பல்வேறு விதமான பொருட்களை நேர்த்திக்கடனாகக் காணிக்கைச் செலுத்தி வழிபடுகின்றனர். நாட்டுப்புறச் சமூகத்தில் வாழும் நாட்டுப்புற மக்கள் பெரும்பாரம்பரிய மரபு (Grate tradition))அடிப்படையிலும், சிறு பாரம்பரிய (Little tradition) மரபு அடிப்படையிலும் இறைவனை வழிபட்டு மகிழ்கின்றனர். நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும், ஏற்றத்தாழ்வுக்கும், நோய்நொடிக்கும் கடவுளையே தஞ்சமடைகின்றனர். அதனடிப்படையிலேயே மூன்றாம் படைவீடான பழனியம்பதியில் கோவில் கொண்டுள்ள பழனியாண்டவன் நாட்டுப்புற மக்களால் விரும்பிக்*

கொண்டாடப்படும் தெய்வமாக விளங்குகிறார். அப்பழனியாண்டவனுக்குப் பழனியம்பதியில் ஆண்டு தோறும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நல்ல நாட்களிலும், முழுமதி நாட்களிலும், வளர்பிறைக் காலங்களிலும் பழந்தமிழர் விழாக்களைக் கொண்டாடினார்கள். இத் திருவிழாக்கள் சமுதாய ஒருமைப்பாட்டிற்கும், வாழ்வியல் சடங்கு முறைகளுக்கும் முத்தாய்ப்பாய் அமைகின்றன. வேண்டுதல் நேர்த்திக்கடனை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புற திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவ்வகையில் தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலான திருவிழா நாட்களில் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பெருந்திரளான முருக பக்தர்கள் பழனி முருகன் கோயிலுக்கு நடை பயணம் மேற்கொள்கின்றனர். பெரும்பாலும் கொங்கு மண்டலப் பகுதியில் வாழும் கொங்கு இன மக்களும், காரைக்குடி செட்டி நாட்டுப் பகுதியில் இருந்து நகரத்தாரும், இடைப்பாடி பகுதியில் வாழும் பல்லாயிரக் கணக்கான நாட்டுப்புற மக்களும், கேரளாவில் இருந்து மலையாள இன மக்களும் பெருந்திரளாகப் பாதயாத்திரை மேற்கொண்டு இறைவனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். உடலை வருத்தி மேற்கொள்ளப்படும் நேர்த்திக்கடனாக உடல் முழுவதும் அலகு குத்தி முருகனை வழிபட்டு வரும் நிலையினையும், அலகு குத்துவதால் உடலுக்கு ஏற்படும் நன்மை குறித்து அறிந்து கொள்வதும் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் அனைத்தும் கள ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது. இறை வழிபாட்டை மேற்கொள்ளும் முருக பக்தர்கள் வழிபாட்டின் பொழுது மேற்கொள்ளும் சடங்கு முறைகள், பழக்க வழக்கங்கள் குறித்த தகவல்கள் மக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் நல்ல பயனுள்ள ஆவணமாகப் பயன்படும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக விரிவாக விவரிக்கப்படுகிறது.

**குறிச்சொற்கள் :**

நாட்டுப்புறவியல், நாட்டுப்புற மரபு, வேண்டுதல்,நேர்த்திக்கடன், காணிக்கை,காவடி, அலகு குத்துதல்.

**முன்னுரை:**

அறுபடை வீடுகளில் மூன்றாவது படைவீடு பழனியம்பதியாகும். இங்கு பழனி மலை மீது எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் கேட்பவர்களுக்குக் கேட்டவரம் தரும் வள்ளலாகத் திகழ்கிறார் தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலான பெரிய திருவிழாக்களின்போது மட்டுமல்லாமல் மற்ற நாட்களிலும் பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு பழனி முருகனை நாடி வருகின்றனர். முருகனைக் காண வரும் பக்தர்கள் தங்கள் அன்பினை வெளிப்படுத்தும் முகமாகத் தங்களால் இயன்ற ஏதாவதொரு பொருளைக் காணிக்கை செலுத்த விழைகின்றனர்.

**ஆய்வுப் பொருள் :**

பழனி முருகவழிபாட்டில் காணலாகும் நாட்டுப்புற நிகழ்வுகளைக் களமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முருக வழிபாட்டில் மக்களின் பண்பாடும், பழக்க வழக்கங்களும், வாழ்வியல் முறைகளும் ஆய்வுக்குரிய பொருளாகின்றன.

**ஆய்வு நோக்கம் :**

இவ்வாய்வு பின்வரும் ஆய்வு நோக்கங்களைக் கொண்டுள்ளது. முருகனை வழிபடும் மக்கள் விழாக்காலங்களில் இறைவனைப் பூசித்து ஆடியும், பாடியும், இசையினை இசைத்தும், காவடி எடுத்தும், அலகு குத்தியும் மேற்கொள்கிற செயல்களை விரிவாக ஆய்ந்து வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனுக்குக் காணிக்கை செலுத்த வரும் மக்களின் நம்பிக்கை மற்றும் மரபு வழியிலான பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள் முதலான செயல்பாடுகள் உளவியல் முறையில் ஆராயப்படுகிறது.

**கருதுகோள்:**

*இறை வழிபாட்டில் வைதீக மரபும், மேனிலையாக்கமும் வரும் வரை சிறு தெய்வ வழிபாடுகளில் நாட்டுப்புறக்கூறுகள் மிகுந்திருப்பதைக் காண்கிறோம். இரைவன் உறையும் இடம்,இறைவனுக்கு எடுக்கப்படும் விழாக்கள், காவடி எடுத்துவருதல் போன்ற நாட்டுப்புற வழிபாட்டு முறைகளை நாம் அறிகின்றோம்.இந்த நாட்டுப்புற வழிபாட்டு முறை முருக வழிபாட்டிலும் எவ்வாறு பயின்று வருகிறது என்பதை ஆய்ந்து அறிந்து தீர்வு சொல்வதே இவ்வாய்வின் கருதுகோள்.*

**காவடி - சொல் விளக்கம் :**

*காவடி என்ற சொல்லுக்கு ''கா, காத்தடி,காமரம்''[1] என்ற பொருள்களை மதுரை தமிழ் பேரகராதியும், '' கா என்ற சொல்லுக்குக் காத்தல், காவடி, தோட்சுமை, காவடித் தண்டு என்ற பொருளையும், காவடி என்ற சொல்லுக்குக் கா, காவுதடி, காத்தண்டு, தோட்சுமை''[2] என்ற பொருளையும் கழகத் தமிழ் அகராதியும் குறிப்பிடுகின்றன.*

*காவு + தடி காவடி ஆகும் ஆண்டவனுக்கான காணிக்கைப் பொருட்களை எடுத்துச் செல்லும் தடி.*

*" ஒரு தலையான் இன்னாது காமம்காப் போல*
*இரு தலையானும் இனிது"[3]*

*(கு.எண் : 1196)*

*எனக் 'கா' என்னும் சொல்லைக் 'காவடி' என்ற பொருளில் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.*

*காவடி என்னும் சொல் கா + அடி என்னும் சொற்களின் கூட்டுக் கலவையாகும். கா என்றால் காப்பாற்றுதல், அடி என்றால் இறைவனின் பாத அடி ஆகும். இறைவனின் பாதத்தை நாம் சரணடைந்தால் அவன் நம்மைக் காப்பான் என்னும் பொருளிலேயே காவடி என்னும் சொல் உருவானது.*

*காவடி என்னும் சொல்லாட்சி முதன் முதலில் எட்டாம் நூற்றாண்டில் முத்தாண்டி புலவர் படைத்த சின்ன மகிபன் குளுவ நாடகம் என்னும் ஏட்டு சுவடியில் இடம்பெற்றுள்ளது.*

*" நெடுங்கா வடியாகவே தோள் சுமை தண்ணியே"[4]*

*மேலும்,*

*" மிச்சமாகிய பச்சியை எண்ணித் தொகையைப் பாரு நீ*
*சீராய்க் காவடி ஆகவே பச்சி எல்லாம் தொகை சேரு"[5]*

*"நெடுந்தூரம் வழி நடந்து கோயிலுக்கு வரும் பக்தர்கள் ஆண்டவன் பூசைக்கான பொருட்களையும் தம் தேவைக்கான பொருட்களையும் தனித்தனியாக கட்டி ஒரு தடியின் உதவி கொண்டு தோலின் இரு புறங்களிலும் தொங்கவிட்டு சுமந்து வந்திருக்கக்கூடும் இதுவே காவடியின் தோற்றம்"[6] என்கிறார். அன்னகாமு.செ.*

***காவடியின் தோற்றம் குறித்த புராணக்கதை :***

*" பழனி மலையில் இடும்பன் மலையின் சிவகிரி, சக்தி கிரி என கைலாயத்தில் இருந்தன. அவற்றை சிவன் அகத்தியர் கொடுக்க, அகத்தியர் பொதிகைக்கு கொண்டு போக நினைத்து அவர் இடும்பாசூரனுக்கு அவைகளை கொண்டு போகும் வழியில் களைப்படைந்து இப்போது இருக்கும் இடத்தில் இடும்பன் இறக்கி வைக்கிறான். களைப்பிலிருந்து நீண்ட இடும்பன் மீண்டும் மலைகளை தூக்கம் முயற்சிக்க*

மலையில் மலைகளை தூக்க முடியவில்லை" . அதன் காரணம் யாது என்று அறிய இடும்பன் முயற்சிக்கும் பொழுது, சிவகிரியின் பாதி வழியில் சிறுவன் ஒருவன் நின்று இருப்பதைக் கண்டு மலையை விட்டு கீழிறங்க ஆணையிட்டான். சிறுவன் மறுக்க முருகனுடன் போர்த் தொடுக்கிறான். கடும் போர் நடந்தது இறுதியில் இறுதியில் இடம் தான் மாண்டு விடுகிறான். இடும்பனின் மனைவி இடும்பி முருகனிடம் முறையிட, உயிர் தருகிறான். உயிர் பெற்றெடுத்த இரும்பத்துடன் முருகனிடம் மன்னிப்புக்கோரி, தான் இந்த இரு மலையிலும் எடுத்து வந்தது போன்று முருகனைக் காண வரும் பக்தர்களும் எடுத்துக்கொண்டு வந்து முருகனை வழிபடுமாறும், அவ்வாறு காவடி கொண்டு வரும் பக்தர்கள் முதலில் தன்னிடம் காவடியை காண்பித்து விட்டு பின்னர் முருகனிடம் செல்ல வேண்டுமென்று வரம் பெறுகிறான். இதுவே காவடியின் தோற்றம் குறித்த புராண கதையாகும்.

**உடலால் சுமந்து வரும் காவடிகள்:**

பழனியாண்டவனுக்குப் பக்தர்கள் தங்கள் தோளில் சுமந்து வரும் காவடிகளைப் போன்றே, உடலால் சுமந்து வரும் காவடிகள் பல காணப்படுகின்றன.

அவை,

1. அலகுக் (வேல்) காவடி
2. பறவைக் காவடி
3. தேர்க் காவடி
4. கல் உரல் காவடி
5. அக்கினிக் காவடி

மேற்காணும் இக்காவடிகளை எடுத்து வரும் பக்தர்களை 'வன்தொண்டர்கள்' என்றழைப்பர்.

**அலகுக் குத்துதல்(வேல் காவடி):**

பக்தர்கள் தம் நாக்கினில் சிறிய அளவிலான வேல் ஒன்றைக் குத்திக் கொண்டோ அல்லது பெரிய அளவிலான வேலினைத் தங்கள் வாயினில் குத்திக் கொண்டோ முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

இவ்வேலானது மூன்றடி முதல் இருபத்திரெண்டு அடி வரையிலான அளவு உடையதாக இருக்கும். இதனை 'வேல் காவடி' என்றழைப்பர்.

மேலும் ஒரு சில பக்தர்கள் தங்கள் வாயில் வேலினைக் குத்திக் கொள்வதுடன், உடல் முழுவதும் சிறு சிறு கொக்கிகளைக் குத்திக் கொண்டும் அக்கொக்கிகளில் பழனியாண்டவனுக்குப் பூசை செய்யத் தேவைப்படும் பூசைப் பொருட்களை மாட்டிக் கொண்டும் முருகனை வழிபடுகின்றனர்.

இதனைச் 'செடில் குத்துதல்' என்றும் அலகு குத்துதல் என்றும் கூறுவர்.

**பறவைக் காவடி :**

பறவைக் காவடி எடுப்போர் அக்காலத்தில் நாற்பத்தெட்டு நாட்கள் கடும் விரதமிருந்து முருகனுக்குக் காவடிப் பொருளாக மாறி, மாட்டுவண்டியில் கயிறால் இழுத்துக் கட்டப்பட்டு முதுகினில் கொக்கிகளை மாட்டி பறவை போல் பறந்த மாதிரி தொங்கிக் கொண்டு வருவர். இதனை 'அந்தரக் காவடி' என்றும் கூறுவர்.

தற்பொழுது இராட்சத கிரேன்களில் ஐந்து முதல் ஒன்பது பேர் வரை குதிரை பொம்மை போல் வடிவமைத்து, அதன் மீது அமர்ந்து கொண்டு, உடம்பு முழுவதும் கத்தியைச் சொருகிக் கொண்டு வெட்ட வெளியில் தொங்கிக் கொண்டு, மலையடிவாரத்தை வலம் வந்து முருகனை வழிபட்டு வருகின்றனர். இப்பறவைக் காவடியை தைப்பூசம் முடிந்த சில நாட்களில் வால்பாறை, மற்றும் சேலம் பகுதிகளில் இருந்து வரும் பக்தர்கள், பழனி சண்முகநதியில் நீராடி, இறைவனை வழிபட்டு உடலில் கொக்கிகளை மாட்டிக் கொண்டு குழுவாகத் தொங்கி வருவதைக் கள ஆய்வில் காண முடிகின்றது.

பறவைக்காவடியாக வந்த பக்தர் ஒருவர், “நாற்பது நாட்கள் கடுமையான விரதமிருந்து, பதினைந்து வருடங்களாக முருகனை வேண்டிக் கொண்டு இவ்வேண்டுதலை நிறைவேற்றுவதாகக் கூறினார்.”[8]



**தேர்க்காவடி:**

இதனை ‘இரதக் காவடி’ என்றும் கூறுவர். மரத்தால் தேர் ஒன்றைச் செய்து, அத்தேரில் பழனியாண்டவன் படம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது, அத்தேரைச் சுற்றி வண்ணக் காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டும், அத்தேரில் நீண்ட கயிறு ஒன்று கட்டப்பட்டுள்ளது. அக்கயிற்றின் நுனியில் கொக்கிகள் மாட்டப்பட்டு, அக்கொக்கிகளை முருகனடியார்கள் தம் முதுகில் குத்திக் கொண்டு தேரை இழுத்துக் கொண்டு மலைக்கோயில் வரை வலம் வருவர். தேர்க்காவடியை இழுத்து வந்த திருவண்ணாமலையைச் சேர்ந்த அண்ணாமலை என்பவர், “நீண்டநாட்களாக வாய்பேசாமல்

இருந்ததாகவும், முருகப்பெருமானை வேண்டிக் கொண்டு வழிபட்ட பின் வாய்பேச வருவதாகவும், கடந்த இருபத்தைந்து வருடங்களாகத் தைப்பூசத்தன்று இந்நேர்த்திக் கடனைச் செலுத்தி வருவதாகவும்"[9] பேட்டியின் பொழுது தெரிவித்தார்.

**கல் உரல் காவடி :**

அக்காலத்தில் தைப்பூசத் திருவிழாவின் பொழுது முருக பக்தர்கள் கல் உரலில் கொக்கிகளால் கோர்க்கப்பட்டக் கயிற்றைக் கட்டி அக்கொக்கிகளை முதுகினில் அலகு குத்திக் கொண்டு மலையடிவாரம் கிரிவீதியில் இழுத்துக் கொண்டு வலம் வருவர். இது பழனியில் காணப்படும் அரிதில் காவடியாகும்.

**அக்கினிக் காவடி :**

அக்கினிச் சட்டியை மாரியம்மனுக்கே பெரும்பாலும் எடுத்து வழிபடுவர். ஆனால் இங்கு பழனி ஆண்டவன் பக்தர்கள் அக்கினியைக் காவடியாகக் எடுத்துக்கொண்டு வருவதைக் கள ஆய்வில் காணமுடிகிறது.

அக்கினிச் சட்டியில் தீ வளர்த்து அச்சட்டியைத் தங்கள் கையில் ஏந்திக்கொண்டு மலையடிவாரத்தை வலம் வருவர். பின்னர் மலைக்கோவிலில் இறைவன் சன்னதி முன் இக்காவடியை இறக்கி வைத்து இறைவனுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். இவ் அக்னி சட்டியையே அக்னி காவடி என்று கூறுவர். இக்காவடியைப் பெரும்பாலும் பெண்களே எடுத்து வருகின்றனர்.

அலகு குத்துதல், பறவைபோல் தொங்கிக் கொண்டு வருதல், தேர்க் காவடி, கல் உரல் இழுத்தல் முதலான உடல் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடும் பொழுது அவர்களின் உடலில் அக்குபஞ்சர் என்னும் முறையில் அழுத்தம் கொடுப்பதால் உடற்பிணி நீங்குவதாக அறிவியல் முறையில் அறிய முடிகிறது.

**முடிவுரை :**

பழனி முருகன் வழிபாட்டில் வேண்டுதல் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் காணிக்கையளித்தல், காவடி செலுத்துதல் முதலான செயல்பாடுகள் மனித சமூகத்தில் தொன்று தொட்டு காலங்காலமாக நிலவி வருகின்றன. நாட்டுப்புற மக்கள் முருக வழிபாட்டைத் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளில் இருந்து பிரிக்க முடியாதவாறு தங்களுக்குப் பிடித்த வகையில் நாட்டுப்புறப் பண்பாட்டோடும் மன உணர்வோட்ட அடிப்படையிலும் வழிபட்டு வரும் நிலையை அறிய முடிகின்றது நேர்த்திக்கடனாகச் செலுத்தப்படும் இக்காணிக்கைப் பொருட்களைச் செலுத்துவோர் உளப்பாட்டினை மரபு வழியான சடங்குகளோடும் பழக்க வழக்கங்களோடும் பொருத்திப்பார்த்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

**சாண்றெண் விளக்கங்கள் :**


1. கோபாலக்கிருஷ்ணக்கோன், மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.751
2. கழகத் தமிழ் அகராதி ,ப.327
3. புலியூர்க் கேசிகன்(உ.ஆ), திருக்குறள் புதிய உரை, ப.245
4. ஏ. என்.பெருமாள், சின்ன மகிபன் குளுவ நாடகம், ப.92)
5. மேலது, ப.94.
6. செ.அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், பக். 36,37.

7. இரத்தின கிருட்டிணமூர்த்தி(ப.ஆ), பழநித் தல வரலாறு ப.66.
8. ஆவலப்பன், வயது 37, பே. நாள்: 8.3.2020
9. அண்ணாமலை, வயது 64,பே.நாள் : 09.03.2020

**துணைநூற்பட்டியல் :**


1. அன்னகாமு.செ, ஏட்டில் எழுதாக் கவிதைகள், சர்வோதயப் பிரசுராலாயம், தஞ்சாவூர்.1966
2. கிருட்டிணமூர்த்தி. இரத்தின (ப.ஆ), பழநித் தல வரலாறு, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. பன்னிரெண்டாம் பதிப்பு-.2005
3. புலியூர்க் கேசிகன்(உ.ஆ), திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம்,சென்னை- 2010
4. பெருமாள்,ஏ.என்., சின்ன மகிபன் குளுவ நாடகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை.முதல் பதிப்பு – 1980


**அகராதிகள் :**


1. கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி , கழகத் தமிழ் கையகராதி,கழக வெளியீடு,சென்னை.1969
2. கோபாலக்கிருஷ்ணக்கோன், மதுரைத் தமிழ்ப் பேரகராதி,எக்ஸ்ப்ஸீயர் பவர் பிரஸ், சென்னை.1937